தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௪	மலர்
	சோபகிருது, ஆவணி.	
௩௯	1963 ஜூலை, ஆகஸ்ட்டு.	௫.

உலகப் பண்பின் தாய் தமிழ்ப் பண்பே

புலவர். தி. நா. அறிவு ஒளி

தமிழ் நாட்டுப் பண்பும், பண்பாடும் தனித்தன்மை வாய்ந்தவை. இன்றைய உலக நாடுகளின் பல்வகைப் பண்பாடுகளினும் சீரியதும் நுண்ணிதும், தமிழகப் பண்பும், பண்பாடுமாகும். காலத்தால் முது பழமை வாய்ந்த தமிழ்ப் பண்பை எண்ணித் தமிழர் பெருமை கொள்ளலாம். பல பழைய நாடுகளின் பண்பும், பண்பாடும் இன்று மறைந்தொழிந்து விட்டன. ஆயின், நம்மருமைச் செந்தமிழ் நாட்டின் தலை சிறந்த தமிழ்ப் பண்பு உயிரோட்டத்தோடு பல்லாயிரமாண்டுகளாக வாழ்ந்துவந்துள்ளமை உள்ளுந்தோறு முவகை நல்குவது. இடைக்காலத்தில் வந்த வேறு சில பழக்க வழக்கத் திணிப்புக்கள் என்ற மூடு பனி, தமிழ்ப் பண்பை ஓரளவு மறைத்தது உண்மையாயினும், அது விலகி வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றும்.

இம் மூடுபனிப் பண்பை (?) (இதைப் பண்பு என்பதும் பொருந்தாது). நாகரிகமாகப் பிழைபட—ஆராய்ச்சியின்றி—நம்பியிருக்கும் மடமை முற்றும் பிழையானதாம். எந்த உயிர்ப் பண்பும், பண்பாட்டுக்கும்—வாழ்க்கை நெறிக்கும்—ஒழுகலாற்றுக்கும் இசைந்தியைந் தியங்கி மன்பதையை வளர்த்து முறைப்படுத்தும் இயல்புடையதாக அமையும். இத்தலைமையியல் பில்லாதது பண்பாகவோ, நாகரிகமாகவோ கொள்ளற் குரியதன்று.

உலகப் பண்புக்கும், உலகப் பண்பாட்டு—நாகரிக—ஒழுகலாற்றுக்கும் வேரும்—வேர் முதலும், உயிரும், உயிராற்றலுமாகியது தமிழ்ப் பண்பும், பண்பாடுமே. இவ்வுண்மையைமறைக்கச் சிலர் முயன்றமுயற்சி பயனற்று விட்டது; சிலர் போலியின் மயக்கத்தில் உண்மையை அறியாமல் மடம் பட்டனர். ஆயினும் வரலாறு இவ்வுண்மையைத் தெளிவாக்கி விட்டது.

நம் நாட்டுக்கு வந்தோர் அனைவரும் பழந்தமிழ்ப் பண்பை யும், பண்பாட்டையும் தம்முடையதாக ஏற்றுக் கொண்டு, ஏற்றவற்றைத் தமக்கே உரியவை என்று கூறி இவண் நிலை நாட்ட முற்பட்டனர். அடிப்படைப் பண்புகள் தமிழ் நாட்டுக் குரிய தனியாற்றல் சான்றவை. இவை கலப்பற்ற தனித் தமிழ்ப் பண்புகளே. இவை வேறு எந்நாட்டுப் பண்பாலும் கலப்புறாது சிறந்தொளிர்ந்தவை.

தமிழகத்துக்கே உரிய தனித் தன்மை இன்று நேற்று தோன்றியதன்று; உலக நாகரிகம் முதலில் தோன்றத் துவங் கிய காலத்திலிருந்து தோன்றி வளர்ந்து வருவதாம். "உணர்ச்சியினின்றும் அறிவு தனித்துத் தொழிற்படத் துவங் கிய அந்தக் காலத்திலிருந்து தமிழ் தனித்தன்மை—தமிழக வாழ்வியல் தனித்தன்மை—தமிழப் பண்பு—பண்பாடு நாகரி கத் தனித்தன்மை தோன்றி ஊழ் முறைப்படி வளர்ந்து சிறந்து செழித்து வருகிறது. அவ்வருமை யியல்பை நாம் பெருமையோடு போற்றி வளர்க்க வேண்டும். இது நமக்குரிய தனிப்பெருங் கடமையாகும்.

தமிழ்ப் பண்பின் உயிர்ச் சுவடுகளை நம் தலைமுறை கட்டா யம் காக்க வேண்டும். வளரும் அறிவியலை வாழ்க்கைத் துணை யாக ஏற்க வேண்டும். அதேபோல் அக வாழ்க்கையைப் பொறியியல் இயக்கமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. பழந் தமிழ்ப் பண்பொன்றே வாழ்வொழுங்கில் தலை சிறந்த பேரின் பமும், அமைதியும் இனிமையும் அளிக்கக் கூடியது.

உணர்ச்சிகளை ஒழுங்கு படுத்தி அரிய கலையோவியமாக ஆக்கிக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்குரிய வாழ்வுக் கடமையாம். உணர்ச்சிகட்கு வெறிக் கள்ளை யூட்டி மயக்கிப் பித்துப் பிடித்தலையச் செய்து, தமக்கும் பிறர்க்கும் தீங்கு விளை விக்கக் கூடாது. தமிழ்ப் பண்பு கற்பிக்கும் துவக்கக் கல்வி இது.

தமிழ்ப் பண்பைக் குறித்து பெரிய விளக்கங்களை ஆராயு முன், சிறு சொற்களில் தமிழ்ப் பண்பு பொலிவதை அறிதல் இன்றியமையாததாம்.

தமிழின் சொல் காட்டும் நாகரிகம், பண்பாடு ஆகியவற் றின் நுட்பங்கள் ஆழ்ந்து ஆராய்ந்துணரத் தக்கன. ஒவ் வொரு சொல்லின் தோற்றம், மாற்றம், அமைப்பு ஆகியவை யும், அதன் வரலாறு, இயல்பு, பொருளுணர்த்து மாற்றல் ஆகி யவையும், தமிழ் மொழியின், தமிழ் மன்பதையின் உணர்வு வளத்தையும், அறிவாழ அகலத்தையும், பண்பின் வேர் வீழ்த் திச் சிறந்த செம்மை நலத்தையும், அக எழுச்சியையும், ஆய்வு

நுட்பத்தையும், இயற்கைத் தாய்மையையும் தெள்ளெனக் காட்டும் பெற்றி தெரிந்து வியத்தற்குரியதாம்.

எண்ணும் ஆற்றல் செழித்து, உலகை நன்கறியும் பகுத்துணர்வும் பகுத்தறிவும் வளர்ந்த பருவமடைந்து மலர்ந்த இளம் ஆடவர்—மகளிர்க்குத் தமிழில் வழங்கும் கிழமைப் பெயர்களை நோக்கிடின் பல நுண்ணுண்மைகள் புலனாகும்.

1. காதலன் > காதலி
2. கிழவன் > கிழத்தி
3. துணைவன் > துணைவி
4. தலைவன் > தலைவி.

இப்பெயர்களின் பொருளை ஆராய்ந்தால், வாழ்வின் ஓட்பத்தை அவை உணர்த்துவதை அறியலாம்.

1. காதல் எனின் நனி பெரும் அன்பு எனப் பொருள்.

2. கிழமை எனின் கட்டற்ற தனித்த நற்பேருரிமை எனப் பொருள்.

3. துணை எனின் உதவும் நட்பு, ஒன்றிய அன்புக் கூட்டு எனப் பொருள்.

4. தலைமை எனின் பிறர்குத் தாழாது மேனிலைக்குயர்ந்து நிற்கும் சால்பு நிலை எனப் பொருள்.

இந்நாற் பெரும் பண்புகளில் இளமையோர் படிப்படியே வளர்ந்து சிறந்து முதியோர்—சான்றோர்—சிறந்தோர்—அந்தணர்—ஐயர் ஆதல் வேண்டும்.

உலக வாழ்வில் அன்பராய், உரிமை வாய்ந்தோராய், ஒன்றி உதவும் கூடி மகிழ்வுற்று இன்புறுத்தும் துணைவராய். இவ்வரிய பண்புகளினால் தலைமை சான்றோராய் மக்கள் வாழ வேண்டும் என்ற நுட்பத்தை—வாழ்வொழுக்க இலக்கணத்தைத்—தமிழ்ச் சொற்களின் வரலாறு வளமாகத் தெளிவுறுத்திக் காட்டுவதை ஆய்ந்துணர வேண்டும்.

மக்கள் வாழ்க்கையின் 'வளர்ச்சி வரலாறு' இச் சொல்லமைப்புக்களால் புலனாவதைத் தமிழரும் உலகினரும் இவண் நலமாய்ந்து சுட்டியமையான் நன்கு தெளிவர். அன்பு செழித்து, உரிமையைக் கொண்டு, துணைமையால் உறவாடி இன்பம் பெற்று, அமைதி யாறுதலால் தலைமை ஏற்றல் வாழ்வற—உலக அற உண்மை என்பதை தமிழர் உணர்ந்தனர். உணர்ந்தாங்கொழுகினர். ஐந்திணை வாழ்வொழுக்க நுட்பமெல்லாம் இந்த வாழ்வியல் வரலாற்று ஓட்பமேயாம்.

இந்த இயற்கைப் பண்பு அன்றைக்கு மட்டுமின்றி இன்றைக்கும் உரியது. என்றைக்கும் உரியது. இப்பண்பாட்டு வாழ்வு தமிழர்க்கு மட்டுமின்றி, ஞாலத்தார்க் கெல்லாம் இன்றியமையாது வேண்டற்பாற்று. இந் நலமார் பண்பாட்டை மீண்டும் மக்கள் தெளிந்தொழுகிச் செம்மல்களாய், அண்ணல்களாய் விளங்கி மறுமலர்ச்சியுற வேண்டும்!

தமிழ்ப் பண்பின் அடிப்படை உலகப் பண்பின் வேர் முதலே என்பதை உணரப் பல்லாற்றானும் மொழிவழியும், வரலாற்று வழியும், கலையொழுக்க, நாகரிக வழியும், இன்னும் பிறவாற்றானும் சான்றுகளுண்டு. புறவொழுக்க வேற்றுமைகள் பல்கி விட்டமையால் பல்வேறின மக்கள் வாழ்வியக்கமும் பல்வேறு கோலங் கொண்டுள்ளதேயன்றி, வேறன்று.

தலைவனைத் தலைவி மணந்து சேர்தல், காதற் கையுறை வாழ்வடிப்படை ஒழுக்க அமைப்பு, கற்புநிறை, இனப் பண்பு ஓம்பும் கடப்பாடு ஆகியவை தமிழகப் பண்பாட்டு—மரபின்—வழி சமைந்ததே உலக இன மக்களெவர்க்கும் இன்றிமைந்திருப்பது என்பதை அறிய வேண்டும்.

'உலகுறவுக் கொள்கை' முதலில் தமிழ்ப் பண்பில் உருவானதற்குரிய அடிப்படையே இதுதான். தான் தாய்ப் பண்பாக அமைந்து, பிறசேய்ப் பண்புகளை ஈன்றமையால் இயற்கையாகச் சேயன்பில் ஈடுபட்டது தமிழ்ப் பண்பு. தன் தனிப் பண்பின் உயிரின் வளர்ச்சிகளைத் தன்னோடுறவாக்கி அணைத்துவக்க விழைவது தாய்மையின் தணியா இயல்பல்லவா? அவ்வியல்புப்படியேதான் தமிழ்ப் பண்பு உலகப் பண்பைத் தன்னோடு உறவுப் பண்பாக்க முனைந்தும் முனைவதுமாம். பூங்குன்றனார் ஓர் தனி இனப் பண்பாகத் தம் உலக அறக் கொள்கையை உருவாக்கினாலும் அது தமிழின் தாய்ப் பண்பாக்வே அமைத்தார். அது ஞாலப்பண்பை அணைத்து, உரிமையோடு உறவாக்கும் பண்பாட்டுரிமையையும் உடனியைத் தளித்தார். ஆம். தமிழ்ப் பண்பே உலகப் பண்பு. உலகப் பண்பே தமிழ்ப் பண்பு என்பதை உலகறிய உணர்த்துவது நம் தலைமுறையின் தொண்டாகும்.

மோரியர் யார்?

த. இராமநாதப்பிள்ளை B. A. Lond,
யாழ்ப்பாணம் பருத்தித்துறை

எந்தை வாழி யாத னுங்கவென்
னெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
யென்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுது
மென்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
வுலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர் புர வெதிர்ந்த வறத்துறை நின்னே. புறம் 175

ஆதன் உங்கன் மீது உள்ள பேரன்பைக் புறம் 175 கூறுங் காலை, மோரியர் ஆணை வெள்ளி மலைக்கு அப்பாலும் சென்ற தென்பதும் வெள்ளி மலைக்கு அப்பால் உதிக்கும் ஆதித்த மண்டிலத்தை அறத்தின் ஒளியான் ஆதனுங்கன் ஒப்பான் என்பதும் புலவன் கள்ளில் ஆத்திரையனால் சுட்டப்பட்டுள்ளன. இது நிற்க. இப்பாட்டிற்கு நல்லுரைகண்ட பழைய உரையாசிரியர் 'வென்வேல் விண் பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர் தின் கதிர்த் திகிரி குறைத்த' என்னும் அடிகளுக்கு 'வென்றிவேலையுடைய விசும்பைத்தோயும் நெடிய குடையினையும் கொடியணிந்த தேரினையும் உடைய நிலமுழுது மாண்ட வேந்தரது திண்ணிய ஆர் சூழ்ந்த சக்கரம் இயங்குதற்குக் குறைக்கப்பட்ட' என உரை இயம்பினர். ஈண்டு மோரியர் ஆவோர் நிலமுழுது மாண்ட ஆழிவேந்தர் என ஆசிரியர் கருதினர். அக்கருத்துப் பொருத்தமுடைத்தே. மோரியர் என்போர் வடவிந்தியாவிலே ஆழிவேந்தராய்ச் செங்கோலோச்சிய அசோகனுடைய முற்சந்ததியார் என்பது வரலாற்றாசிரியார் துணிபு. மோரியர் கி.மு. 5-ம் நூற்றாண்டு முதல் கி.மு. 3 ம் நூற்றாண்டு இறுதிவரை ஆழி உருட்டினர். அவர்களுள் சிறந்தோர் .சந்திரகுப்தன் சமுத்திரகுப்தன் அசோகன் என்போரே. அவர்கள் தலைநகர் கங்கைக் கரையிலுள்ள புகழ்பெற்ற பாடலிபுரமாகும். உரையாசிரியர் சரித்திரக் கல்வி ஆராயப்படாத காலத்தில் இருந்த வராகையால், "மோரியர் ஆவோர் சக்கரவாளச் சக்கிரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரும் என்ப" எனக் கூறிப் போந்தனர். சக்கரவாளம் என்பது வெள்ளியங்கிரிக்கு அப்பால் உள்ள மலையெனின், வடபால் அரசு செலுத்திய ஆழிவேந்தர் என்பது ஒருவாறு பொருந்தும். இனி மோரியரை விச்சாதரர் என்பது

பாண்டியன் கோனேரிமை கொண்டான் கல்வெட்டு

வித்துவான், கா. மாரன்,
தமிழாசிரியர். கழக உயர்நிலைப் பள்ளி.

இறைவனை வழிபடவும், அவன் வண்ணத் திருமேனி காணவும் அறிவறிந்த சான்றோர் அவன் தன்மை சாற்றியும்; அத்தன்மை அறிய மனப்பரப்பு இல்லார்க்குச் சிலைவடிவு காட்டியும்; இறைமாட்சி விளக்கினர். அதன் பயனாய் மண்ணும் விண்ணும் நிறைந்தானுக்கு எங்கும் திருக்கோயில் எடுக்கப்பட்டது. அவன்பால் மெய்யடிமை கொண்ட திருத்தொண்டர்களுக்கும்; ஆங்கே சிலைவடித்துச் சிறுகோயில் எழுப்பப்பட்டது. அக்கோயில் வழிபாடு இடைவிடாது நடக்க அரசரும் மற்றையோரும் நிலபுலங் கொடுத்துச் சிறப்பித்தனர். அதைச் செம்பிலும் கல்லிலும் எழுதி வைத்துப் பின்னவரும் அவ்வழி பின்பற்ற வகை செய்தனர்.

அத்தகைய அறச்செய்திக் கல்வெட்டுகள் நூற்றுக்கு மேற்பட்டவை. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ளன, அவற்றுள் கோனேரிமை கொண்டான் கல்வெட்டு ஒன்றை இன்றையத் திருக்கோயில் குடமுழுக்கு விழாச் சிறப்பு மலரில் வெளியிடப் படி எடுத்தேன். கல்வெட்டு வரிகள் மட்டும் அம்மலரில் ஆய்வுக்கென்று வெளியிட்டுள்ளேன். அதை யானே ஆய்ந்து கட்டுரை வடிவாகத் தந்துள்ளேன். அறிஞர்கள் குறைநிறை கண்டு என்னை ஊக்குவிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மயங்கக் கூறுதலே ஒழியப் பிறிதில்லை. விச்சாதரர் வித்தியாதரர்—இந்திர சாலம் வல்ல இயக்கச்சாதியினர். அவர்கள் இலக்கியம் வல்லாருடைய நினைவுலகில் இயங்கினர். வித்தியாதரரைச் சிலர் கந்தருவர் என மயங்கல் உண்டு. வித்தியாதரர் நிலவுலகில் வசிப்பவராயின், அவர் இலங்கையின் வடபால் வசித்தோர் என உலக வரலாற்றின்கண் காட்டினும். நாகர் தென்னிந்தியாவிலும் கீழிந்தியாவிலும் வசித்தனர் எனவும் தெரிகிறது. உரையாசிரியர் வடவிந்திய வேந்தரை இலங்கை வேந்தர் என மயங்கினர். அவர் மோரியர் யார் வித்தியாதரர் யார் நாகர் யார் எனத் தெரியாதிருந்தனர். சங்க காலத்துக்குப்பின் இருந்த ஆசிரியர்கள் இலக்கண இலக்கியம் புராணம் என்பன ஆராய்ந்தாரொழிய, வரலாறு, பூமிநூல் முதலியவற்றைச் சிறிதும் தேர்ந்திலர் என்பது அறியற் பாலது.

இது இருக்குமிடம் :— மதுரை சோம சுந்தரர் ஆலய இரண்டாவது சுற்றுப்புறமதில் நடுவில் எட்டடி உயரத்தில் பதினைந்து வரிகளையுடையதாக இது வெட்டப்பட்டுள்ளது.

இதன் காலம் :-- இக்கல்வெட்டில் கூறப்படும் கோனேரிமை கொண்டான் என்ற சிறப்புப் பெயர் கி. பி. 1268–ல் பட்டமேற்ற மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பானுக்கு வழங்கப்பட்டுள்ளது, என்று மு. ராகவய்யங்கார் அவர்கள் கூறியுள்ளார். அவன் பட்டம் ஏற்ற நான்காம் ஆண்டில் இது வெட்டப்பட்டுள்ளதாகத் தெரிவதால் இதன் காலம் கி. பி, 1272 ஆகும்.

கல்வெட்டு வரிகள்

1–வது வரி :— ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபு வனச்சக்கர வர்த்திகள் கோனேரிமை கொண்டான் உடையார் திருவால வாயுடைய நாயனர் கோயில் தர சேத்திரர்க்கு

2–வது வரி :— உடையார் திருவாலவாய் உடைய நாயனர்க்கு நம்பேரில் காட்டின திருமஞ்சனத்துக்கு கற்பூரம் கஸ்தூரி குங்குமம் சந்தனம் பன்

3–வது வரி :— னீர் ஊட்ட வேண்டும் இப்படி விஞ்சனத்துக்கு வெண் மெழுதலுக்கு விட்ட முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூர் உலகளந்த சோ

4–வது வரி :— ழமா நல்லூர்க் கரிய மாணிக்காழ்வான் திருவுடை நாயனரான வீரபாண்டிய காலிங்கராயன் காணியான அண்ட நாட்டு

5–வது வரி :— பாவரி நல்லூரான சேத்துவாமத்து நல்லூர் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் வாழை கொழுந்து உள்ளிட்டவா

6–வது வரி :— னப் பயிரும் மாவடை குளவடை தறியிறை செக்கிறை தட்டொலி தட்டிறை தட்டார்ப்பாட்டம் உட்பட்ட வினைத் தாயங்களுக்கு

7–வது வரி :— ம் கடமையும் தெற்றிலக்கை கடை கூட்டிலக்கை பஞ்ச பீலி சந்திர விக்ரகப் பேறு வாசல் விநியோகம் உட்பட்ட அவனு

8–வது வரி :— க்கு பாக்களும் உட்பட்ட வரிகளும் கழித்து இவ் ஆருக்கு முன்னவைது தைமாதம் முதல் ஆண்டொன்றுக்கு வாடாக் கடமையாக

9–வது வரி :— இறுத்துப் பொதும் பொன் ஐம்பதில் விளங்குடி நாயனர் விக்கிரம பாண்டிய உடைய நாயனருக்கு இறுத்துப் பொதும் பொ

10-வது வரி :— ன்பத்து நீக்கித் தங்களுக்கு இறுத்துப் பொதும் பொன் நாற்பது ஆக பொன் ஐம்பது வாடாக் கடமையாக இறுத்துப் பொ

11-வது வரி :— தும்படியும் சொன்னோம். இப்படியிலே செல்லுபித்துக் கொள்ளவும். இப்படிக்கு இவ்வோலை பிடிபா

12-வது வரி :— டாகக் கொண்டு இவ்வூர்நான் கெல்லை யிலும் திருச்சூலஸ்தரமும் பன்னிக் கல்லிலும் செம்பிலும் வெட்டி சந்திரா

13-வது வரி — தித்தவரை செல்ல அனுபவித்துப் போக்க இவை கப்பலூருடையான் எழுத்து வான வரையான் எழுத்து யாண்டு மூன்

14-வது வரி :— ருவது, நாள் உள அயக...... இப்படிக்கு இது பன்மா ஹேஸ்வரரகைஷ பன்னினென் இக்கோயில் சாஸ்திரி ஆச்சாரியான சங்கப் புலவர்.

15-வது வரி :— திருவெம்பாவை ஆசிரியனை திருவால வாய் ஆச்சாரியன் எழுத்து. உ

இதன் விளக்கம்

ஸ்வஸ்தி = நலம் வளர்க

ஸ்ரீ = திரு

திரிபுவனச் சக்கரவர்த்திகள்=சேர சோழ பாண்டியப் பெரு நாட்டை ஆண்ட மாமன்னன்

(கேனே) கோனேரிமை கொண்டான்=அரச நெறியை இமைபோல் காத்தவன் (மாறவர்மன் குலசேகர பாண்டியன்-பட்டம் கி. பி. 1268)

நாயனர்=இறைவனையும் தலைவனையும் தெய்வத் தொண்டர்களையும் குறிக்கும் சிறப்புச் சொல்.

தரசேத்திரர் = சிறு தெய்வம் (மதுரையைச் சேர்ந்த இடத்தில் உள்ள கோயில்)

நம்பேரில் காட்டின திருமஞ்சனத்துக்கு=அரசன் தன் பெயரில் செய்யச் சொன்ன அபிசேகத்திற்கு

விஞ்சனத்துக்கு=தெய்வத்திற்குப் படைக்கும் காய்கறி.

வெண்மெழுதலுக்கு=வெண்சாந்து சாத்துதற்கு

முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூர் ஆன உலகளந்த சோழமாநல்லூர்=இப்பகுதி இன்றைய கானாடு காத்தான், செட்டிநாடு பகுதியைச் சேர்ந்ததாகும் (மதுரைக்குத் தென் மேற்குப் பக்கத்தில் முத்துப் பட்டினம் கப்பலூர் என்ற ஊர்கள் உள்ளன.)

கரிய மாணிக்காழ்வான் திருவுடைய நாயனரான வீர பாண்டிய காலிங்கராயன்=இவன் கப்பலூரில் பிறந்தவன். கப்பற்கோவை எனப்படும் நூலின் தலைவன் இவன் இப் பாண்டியனின் படைத் தலைவன்.

காணியாண=கரிய மாணிக்காழ்வான் அதிகாரத்தில் இருந்த (இடமான) ஊரின் நிலங்கள்.

அண்ட நாட்டு பாவரி நல்லூரான சேத்துவாமாத்து நல்லூர்=அண்ட நாடு என்பது மதுரைக்கு மேற்கு பகுதி நாடாக இருந்திருக்க வேண்டும். சேத்துவாமாத்து நல்லூர் என்பது, இன்று மதுரைக்கு மேற்கே உள்ளே கீழ்மாத்தூர் மேல் மாத்தூராக இருக்க வேண்டும். [திருவேடகத்திற்கு எதிர்த்திசை வைகைத் தென்கரையில்]

கொழுந்து=வெற்றிலை

வான்பயிறு=புன்செய் நிலத்தில் விளையும் பயிறு வகைகள்

மாவடை=மிருகங்கள் மேய்ச்சல் நிலம் அல்லது மிருகங் களினுல் வரும் பயன்—வரி.

குளவடை=குளத்தினுல் வரும் பயன்—வரி.

தறியிறை=நெசவு செய்வார் செலுத்தும் வரி.

தட்டொலி, தட்டிறை, தட்டார்ப் பாட்டம்=இவை உலோக வேலை செய்வார் செலுத்தும் வரிகள்.

அனைத்தாயங்களுக்கும் = எல்லா தொழில்களுக்கும் கடமையும் = அரசாங்க வரியும் (மேலே கூறப்பட்ட வரிகள் பேரரசுக்குச் சேரவேண்டிய வரிகள். கீழே வரும் வரிகள் ஊர்த் தலைவனுக்குச் சேர வேண்டிய வரிகள்)

தெற்றிலக்கை = பொது இடத்தில் கூடமோ திண்ணை யோ அமைத்தால் அதற்குச் செலுத்தும் வரி.

கடை கூட்டிலக்கை = புதிய இடத்தில் குடியேற்றத் துக்குச் செலுத்தும் வரி. அல்லது சந்தை கூடுதற்கு வரி.

சந்திர விக்ரகப் பேறு = கிராம நீதிபதிக்குக் கொடுக்கும் வரி.

வாசல் வினியோகம்=வரிவாங்கிக் கொடுப்பதற்குக் கூலி.

உட்பட்ட அவனுக்குப் பாக்களும் = உட்பட்ட வரிகள் அவன் பக்கம் சேர வேண்டியது. தெற்றிலக்கை என்னும் வரியிலிருந்து சந்திரவிக்ரகப்பேறு என்னும் வரிகள் வரை ஊர்த் தலைவனுகிய கரிய மாணிக்காழ்வானுக்குச் சேர வேண்டியது.

வரியிலுங் கழித்து = கரிய மாணிக்காழ்வானுக்குச் சேர வேண்டிய வரியைக் கழித்துக் கொண்டு.

இவ்வூருக்கு முன்னுவது தைமாதம் முதல் = இவ்வூரில் வருகிற தைமாதம் முதல்.

வாடாக் கடமையாக இறுத்த பொதும் = மக்கள் மறுக்காது கொடுக்கும் அரசாங்க வரியாக வாங்கியபோதும்.

பொன் ஐம்பதில் விளங்குடி நாயனுர் விக்ரம பாண்டிய உடைய நாயனுருக்கு இறுத்துப் பொதும் = அரசாங்க வரியாக வந்த பொன் ஐம்பதில் விக்ரம பாண்டியரால் கோயில் எடுத்த விளாங்குடியில் எழுந்தருளியுள்ள இறைவனுரான விளங்குடி நாயனுருக்கு.

பொன்பத்து நீக்கி = விளங்குடி நாயனுர் திருமஞ்சனத் துக்குக் கொடுத்த பத்து பொற்காசுகளை (நீக்கி) கழித்துக் கொண்டு பொன் நாற்பது ஆக தங்களுக்கு இறுத்துப் பொதுப் படியும்.

சொன்னேம் = மீத முள்ள நாற்பது பொற்காசுகளை தங்களிடத்தில் (அரசனிடத்தில்) கொடுக்கும்படியும் சொன்னேம்.

இவ்வோலைப் பிடிபாடாக = இவ்வோலையின் கட்டளைப்படி.

திருச்சூலக்கல் ஸ்தரமும் பன்னி = திருச்சூலச் சின்ன மிட்ட எல்லைக்கல் நாட்டி.

சந்திராதித்தவரை = சந்திரனும் சூரியனும் உலகில் உள்ளவரை

அனுபவித்துப் போக்க = அனுபவித்து வர

பண்மாஹேஸ்வர ரக்ஷைபன்னி = சிவனடியார்கள் காக்க வேண்டிக் கொண்டு.

யான்று மூன்ருவதுநாள் உளஅயக = கோனேரிமை கொண்டான், பட்டமேற்ற மூன்ருவது ஆண்டு இருநூற்றி எண்பத் தொன்ருவது நாளில் இக்கல் செய்தி வெட்டியது. கோயில் சாஸ்திரி ஆச்சாரியன் சங்கப் புலவர் திருவெம்பாவை ஆசிரியனுன திருவாலவாய் ஆச்சாரியன் = இறைவன் பெயரையுடைய இவன் அரசன் கட்டளையில் கையொப்பம் இடுபவனுகவும், கோயில் சாஸ்திரியாகவும், தமிழ் சங்கப் புலவனுகவும் திருவெம்பாவை பயிற்றும் ஆசிரியனுகவும் இருந்துள்ளான் என்பதால் புலமை மிக்கான் என அறிகிறேம்.

கல்வெட்டுத் தெளிவு :

பதின்முன்ரும் நூற்ருண்டின் இடையில் தமிழகம் முழுமையும் கோலோச்சி வந்தவன் கோனேரின்மை கொண்டான்

என்ற மாறவர்மன் குலசேகர பாண்டியனுவான். இவன் கி. பி. 1272, ல் தன் பெயரில் மதுரை சோம சுந்தரக் கடவுளுக்குத் திரு மஞ்சன மாட்டவும் திருச்சாந்திடவும் காய்கறி படைக்கவும் ஆகும் செலவுக்கு, நிபந்தம் விட்டுள்ளான்.

அதற்குத் தமது படைத்தலைவனுன கப்பலூர் கரிய மாணிக்காழ்வான் அதிகாரத்திலிருந்த பாவறி நல்லூரான சேத்துவாமாத்தூரை விட்டு, அவ்வூர் வரிகளில் அவ்வூர்த் தலைவனுன கரிய மாணிக்காழ்வானுக்குச் சேரவேண்டிய வரிகளை எடுத்துக் கொண்டு; மீதி அரசாங்க வரியாக வந்த ஐம்பது பொற்காசுகளில், பத்து பொற்காசுகளை மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் கிளைக் கோயிலாக, மதுரைக்கு வடமேற்கே நான்கு கல் தூரத்திலுள்ள விளாங்குடியில் விக்கிரமபாண்டியன் தன் பெயரில் எடுத்த விளாங்குடி நாயனுருக்கு வழிபாடு செலவுக்காகக் கொடுக்கவும்; மீதமுள்ள நாற்பது காசை அரசாங்கத்தில் செலுத்தி விடவும் கட்டளை யிட்டுள்ளான். அரசன் கட்டளையின்மேல் கல்வெட்டில் கையொப்பமிட்டவர்கள் கப்பலூருடையான், வாணவத ரையன், திருவாலவாய் ஆச்சாரியன் என்பார்கள்.

விளாங்குடி நாயனுர் கோயில் :—

இக்கோயில் மதுரைக்கு வடமேற்கே மூன்ருவது கல்லில் சின்ன விளாங்குடியில் பெயரற்ற நிலையில் வழிபாடற்று மூலமின்றி சிலையின்றி இருக்கிறது. இக்கோயிலை எடுத்தவன் சோழர்களுக்கடங்கிப் பாண்டிய நாட்டை ஆண்ட விக்கிரம பாண்டியனுகை இருக்க வேண்டும். இவன் காலம் கி. பி. 1180 முதல் 1190 வரையாகும்.

இக்கோயிலை நாயக்கர் காலத்தில் முகப்பை இடித்துக் கள்ளழகர் தங்கும் மண்டபமாக மாற்றியுள்ளார். அதனுல் அங்குள்ள மூலச் சிலைகள் மதுரை மீனுட்சி கோயிலில் வைக்கப்பட்டு மறதிக்கு இரையாகி இருந்தது. என்னுல் அது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயிலின் விபரமும் யானே கண்டு அதை "தமிழ்நாடு" நாளிதழில் 30—5—63 அன்று எழுதியுள்ளேன்.

பாவறி நல்லூரான சேத்துவா மாத்து நல்லூர் :—

இவ்வூர் மதுரைக்கு மேற்கே சுமார் ஆறு ஏழுகல் கீழ்மாத்தூர் மேல் மாத்தூராக இருக்கிறது. திருவேடகத் திற்கும் மதுரைக்கும் இடையில் இருந்து கூன் பாண்டியன் கால நிகழ்ச்சியை நினைவுபடுத்துவதாகும். பா + அறிந்த + நல்லூர் என்பதால், சமணர்கள் பாவினையும், திருஞான சம்பந்தர் பாவினையும் எது உயர்வு என அறிய புனல்வாதம்

காவிரி — காவேரி

தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி.

"இருந்ததமிழே! உன்னல் இருந்தேன்! இமையோர்
விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்"

[தமிழ்விடு தூது கருக]

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்'பென விளங்கா நின்ற தண்டமிழ்த் தமிழகத்தின்கண் 'புனல் பரந்து பொன் கொழிக்கு'மென முட்டாச் சிறப்பு பெற்ற குடமலைப் பிறந்த தண்பெருங் 'காவிரி'யின் பெயரை நாடலே இக்கட்டுரையாம்.

இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்ளாலாகி ஒன்பான் சுவையு மொருங் கமைந்த கவின்கலை நூலென மதிக்கப் பெறூஉம் சிலப்பதிகாரத்தின்கண் காவிரி யாற்றின் பெயர் 'காவேரி' எனப் பயிலப்படுகிறது பயிலக் கண்டு வடமொழி வேட்கை கொண்ட சில்லோரச் சொல் வட சொல்லென்றும், ஒரு சாரார் அச் சொல் டாலமி குறித்த 'சாபெரிஸ்' என்ற கிரேக்கப் பெயரினின்றும் திரிந்த சொல்லே என்றும் இயம்புவர் 1.

---

1 "காவிரி என்ற பழம் பெயரைச் 'சாபெரிஸ்' என்று டாலமி குறிக்கின்ருர். இப்பெயரையேத் திரித்துக் 'காவேரி' என மக்கள் வழங்கினர். இங்ஙனம் திரிந்த பெயரையே சிலப்பதிகாரமும் 'காவேரி' யென்று குறிப்பிடுகின்றது"—இலக்கிய தீபம் By S. வையாபுரி பிள்ளை.

நடந்த இடத்தை இப்பெயர் அறிவிக்கிறது. இவ்விடத்திலிருந்து இருவர் பாவினையும் வைகை ஆற்றில் விட சம்பந்தர் பாடல் எதிர்த்து திருவேடகத்தில் ஏறியிருக்க வேண்டும். சமணர்கள்பா நீரால் திருப்பப்பட்டு மதுரைக்குக் கிழக்கே கரையில் சேர்ந்திருக்க வேண்டும். அதனுல் "திரும்பிய பா சேர்ந்த இடம் திருப்பா சேத்தி ஆகிவிட்டது எனலாம்" இது மதுரை கந்தசாமி புலவர் அவர்கள் கருத்து.

ஆகவே பாவறிந்த நல்லூர் என்பது சைவ சமணப் போராட்டத்தை நினைவு படுத்தும் ஊர் என்பதில் ஐயமில்லை இது என் எண்ணம்.

[குறிப்பு :— மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் குடமுழுக்கு விழாச் ;சிறப்பு மலரில் நான் கொடுத்த கல்வெட்டு வரிகளில் என்னுல் ஏற்படாத சில குறைகள் உண்டு. அக்குறைவினை இக்கட்டுரை தீர்த்துவைக்கு மென்று எண்ணுகிறேன்.]

"திங்கள்மாலை வெண்குடையான் சென்னி செங்கோலது வோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி!காவேரி!
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங்கற் பென்றறிந்தேன் வாழி!காவேரி!"
(சிலம்பு-கானல்வரி)

எனக் குடக்கோச்சேரல் இளங்கோ வடிகள் கானல்வரியின் கண், கோவலனும் மாமலர் நெடுங்கண் மாதவியும் முகம் உடை வரியாய்க், காவிரியை மகடூஉவாக்கி முன்னிலைப் படுத்திப் பாடுங்கால் மொழிகின்றார். பாங்குடன் பழங் காலத்தே உரைவகுத்த ஆசிரியர் அடியார்க்கு நல்லார் இதற் குரை யெழுதுங்கால் காவேரி—கவேரன் புதல்வி; இதனைத் 'தவாநீர்க் காவிரிப்பாவை தன்றாதை, கவேரனாங் கிருந்த கவேரவனமும்' என்பதனால் உணர்க, என வடமொழிப் புராணக் கதையைத் தழீஇ, புகுத்தி வடசொல்லென உரைப்பர். இவ்வுரை ஒல்லாது ஈண்டு காவிரி என்ற சொல்லே விளிநிலை பெற்று 'காவேரி' என்றாயது. ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியர் இயற்றிய மாண்புடைத் தொல் காப்பியத்தின்கண் வருஉம்,

"புள்ளியும் உயிரும் இறுதியாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப்பெயரும்
விளிநிலை பெறாஉம் காலம் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் வரலே"
(தொல், சொல் விளிமாபு—நச)

என்ற சூத்திரவழி காவிரியென்னும் பெயர் 'காவேரி' என ஆயது எனக் கொள்ளல் தகும். அல்லதூஉம் காவிரி யாற்றினை இளங்கோவடிகள் மகடூஉவாக்கி முன்னிலையில் 'வாழி காவிரி' எனவும், 'வாழி காவிரியே' எனவும் பிறவாற் றான் இசைப்பினும் ஓசை கெடுதலைக் காண்மின்.

கவினிய கழக இலக்கியங்களில் யாண்டும் காவிரியென்ற பெயரல்லாது வேறுபெயர் இல்லை. கால்டுவெல் அவர்களும் கபேரஸ் (காவேரி) என்பது வடசொல்லாகக் கொள்ளப் படினும் உண்மையில் திராவிடச் சொல்லென்று கொள்ள இடமுண்டென் றையமுடன் மொழிகுவர்.[2] அங்ஙனம் மொழியக் காரணம் என்னையாலோ வெனின் அவற்கு எழிலிய கழக நூல்களில் பயிற்சியின்மையே யாமென்க. பிற்றை ஞான்றிலக்கியங்களைப் பயின்று நாட்டம் செய்தவர். என்னை? அவரே தனது நூலின்கண் "ஒன்பதாம் நூற்றாண் டிற்கு முற்பட்டதாக யாதொரு தமிழ் நூலு மெழுதப்

2. கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக். 146.

பட்டிருத்தல் கூடுமென்று சொல்வதற்கில்லை[3] யென்று கூறுதலால் என்க. அன்றியும் இடைக் காலத்தே தோன்றிய சிந்தாமணி யொப்பப் பிற்றை ஞான்றிலக்கியங்களைக் கற்று கழக இலக்கியங்களைக் கல்லாது விடுத்தமையாலே இப்பிழை யேற்பட்டது என்க. கழக நூல்களைக் கசடறக் கற்றிருப்பா ராயின் திராவிடச் (தமிழ்) சொல்லென்றே யெற்றிக் கூறியிருப்பர் என்பது ஒருதலை.

திவாகர நிகண்டின்கண் காவிரியின் பெயரைக் குறிப்புழி "பொன்னி, காவிரி" (சே.தி.) என்றே திவாகரர் குறிப்பிடுவர். திவாகரர் வாழ்ந்த ஞான்று (8—9 நூற்றாண்டு) 'காவிரி' என்ற பெயர் ஏட்டு வழக்காற்றிலோ, பேச்சு வழக்காற்றிலோ இருந்திருப்பின் ஆண்டு அவர் புகன்றிருப்பர். என்னை? மாண்புடை மணிமேகலையின்கண் காவிரி புகும் பட்டினத்தின் பெயராகக் குறிக்கப் பெறுஉம் 'காகந்த' யென்ற பெயரைச் சுட்டுமவர் (காகந்தி, புகார், காவிரிப் பூம்பட்டினம்—திவா.5,111.) அதே மணிமேகலையின்கண் குறிக்கப் பெறாஉம் காவேரியைச் (கவேரகன்னி) சுட்டாது விடுத்ததனைக் காண்க. கண்டு திவாகரர் இருந்த ஞான்று காவேரி என்ற பெயர் காவிரியின் பெயராக வழக்கியலில் இல்லை எனத் தெளியலாமன்றோ? அன்றியும் "பொன்னி, காவிரி யிரண்டும் பொருந்து காவேரியின் பெயர் "(சூடா நிகண்டு. ரூ. 229 என்று சூடாமணி நிகண்டு கூறல் காண்க. எனவே 'காவேரி' என்ற பெயர் காவிரிக்கு 8, 9 நூற்றாண்டு கட்குப் பின்னே ஏற்பட்டிருக்க வேண்டும். கி.பி. 2 ம் நூற்றாண்டில் சிலப்பதி கார காலத்தில் அச்சொல் வழங்கியது என்பது ஏற்புடைத்தன்று.

சிலம்பின்கண் எல்லா இடங்களிலும் (கானல் வரிதவிற) 'காவிரி' என்ற சொல்லே பயிலப்படுதல் நோக்கற் பாலதாம். மணிமேகலையின்கண்ணும் 'காவிரி' என்ற சொல்லே குறிக்கப் படுகிறது. (காவிரிப்பாவை; காவிரிவாயில்; காவிரிப்படப்பை காவிரிப்பட்டினம்.) எனவே அங்ஙனம் அடிகள் வாழ்ந்த ஞான்று 'காவிரி' யென்ற சொல் வழக்கியலில் இருந்திருப்பின் ஏனைய இடங்களிலும் அச்சொல் கொண்டே குறித்திருப்பரன்றோ?

'காவேரி' என்ற சொல் டாலமி குறித்த 'சாபெரிஸ்' என்ற கிரேக்கப் பெயரினின்றும் திரிந்த சொல் என்ற கூற்றும் பொருந்தாது. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் (கிரீக்) 'க'கரம், 'ச'கரமாக மாறல் உண்டு. (எ-டு) கேரள புத்திரர்—செலபொத்ராஸ் (**Celobothras-Pliney**) முசிரி, முசிரிஸ் என்றுயதுபோல் ஈற்றில் ஸகரம் சேர்ந்தது. மற்றும்

3. கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக். 134—135.

வகரம் ஒரோவழி பகரமாதலும் உண்டு. இங்ஙனம் தமிழி னின்று திரிந்த கிரேக்கர்கள் வழங்கிய பெயரையே வடமொழி எடுத்துக் கொண்டது. கால்டுவெல் அவர்கள் "கிரேக்க மொழியில் எடுத்துக் காட்டப்படும் பெயர்களுள் சிலவற்றில் தமிழ்நாட்டில் ஆரிய பார்ப்பனர் புகுந்து பல இடங்களில் தங்களையும் தங்கள் பெயர்களையும் நிலை நிறுத்தி விட்டனர். என்று கூறுவர். இங்ஙனம் கிரேக்கச் சொல்லி லிருந்து திரிந்த பெயரையே ஆரியர்கள் கொண்டு அதற்கோர் காரணச் சொல்லையும் கட்டிவிட்டனர். அன்றியும் டாக்டர் பர்னல் இண்டியன் ஆண்டிகுவரி **(Indian Antiquary)** யென்ற வெளியீட்டில் சில நூற்றாண்டுகள் முன்னதாக இலக்கியங் களில் பார்ப்பன இடப்பெயர்கள் சில காணப்படுகின்றன. இவை பேராற்றுத் துறைகளிலும், கடற்றுறை முகங்களிலும் காணப் பெறுபவை இவை பௌளத்தர்களால் வழங்கப் பெற்றவை போலும்" எனக் குறிப்பர்.[4] இதன்படி நோக்குங் கால் 'காவேரி' யென்ற சொல்லை வடமொழியாளர் கிரேக்க மொழியிலிருந்து பெற்றனர் என்பதாம். அஃதேயல்லாமல் பரிதிமாற் கலைஞர் "தென்னாட்டு வடமொழியாளர் மட்டிற் சில யாற்றுப் பெயர், ஊர்ப் பெயர், மலைப் பெயர், முதலிய வற்றைத் தங்கள் ஒலி நூல் சாத்திரத்திற் கியைந்த வண்ணம் ஓசை வேறுபாடு செய்துகொண்டு தாங்கள் வகுக்கப் புகுந்த புராணாதிகளில் வழங்குவாராயினர்' என்பர். எனவே காவேரி என்ற சொல் தமிழினின்று திரித்து வடமொழி யாளர் வழங்கினர் எனக் கொள்ளவும் இடமுண்டு.

இது காறும் கூறியவற்றால் சிலப்பதிகாரத்தின்கண் கானல்வரியில் வரும் 'காவேரி' என்ற சொல் காவிரி என்னும் சொல்லின் விளிநிலையே யன்றி டால மிகுறித்த 'சாபெரிஸ்' என்ற கிரேக்கப் பெயரினின்றும் திரிந்த சொல் அன்று என்பதும் தெளிவுறும். அன்றியும் 'காவேரி' என்ற சொல் வடசொல்லன்று, தமிழ்ச் சொல்லேயாகும் என்பதும் நன்கு விளங்கும்.

---

4. கால்டுவெல் ஒப்பிலக்கணம்.

தமிழில் சிறுகதை :—

வீரமாமுனிவர் முதல் வரதராசனுர் வரை

த. செந்தில் நாதன். M. A.,
முதல் ஆண்டு (ஆங்கில இலக்கியம்)
மாநிலக்கல்லூரி (Enleish literaturs) சென்னை—5.

செழித்தோங்கும் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் வெளிவரும் ஏடுகள் பலவும், சிறுகதைகளைத் தாங்கிய வண்ணம் தான் வெளி வந்து கொண்டிருக்கின்றன. வேலைகள் பலவற்றுலும் ஓய்வினை அரிதாகப் பெறும் மக்கள், விரைவில் படித்து முடிக்கக் கூடிய இலக்கியங்களையே பெரிதும் விரும்புகின்றனர். எனவே, எதிர் காலத்திலும் சிறுகதைகளுக்கு மதிப்பிருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு தழைத்தோங்கும் இந்தச் சிறுகதை எவ்வாறு தமிழில் வளர்ந்தது என்பதனை அறிய வேண்டியது நமது கடமையாகும். செருயுள் வடிவிலே அமைந்து கிடக்கும் நூல்களைத்தவிர ஏனையவற்றை இலக்கியம் என்று ஒப்புக் கொள்ளாத நிலை இன்று இல்லை. ஆகவே, இலக்கியத்தில் ஒரு துறையான இச்சிறுகதை வளர்ந்த வகையை அறிய வேண்டியது இன்றியமையாத தாகும்.

சிறுகதை, தமிழ் இலக்கியத்திற்குப் புதியது என்று ஒரு வகையிலும் புதியது அல்ல என்று இன்னொரு வகை யிலும் கூறலாம். இரு கூற்றிலும் உண்மை இருக்கின்றது என்றும் சொல்லலாம்.

வீரமாமுனிவர் "பரமார்த்த குரு கதைகள்" வெளி வருதற்கு முன்னர் தமிழில் சிறுகதைகளே இல்லை. எனவே, தொல்காப்பியத்திலேயே சிறுகதைக்கு இலக்கணம் இருக் கின்றது என்று வாதிட்டாலும், இலக்கியம் என்று சுட்டிக் காட்ட ஒன்றும் இல்லை. மேலை நாட்டினர்தான் சிறுகதை எழுதும் முறையைக் கற்பித்தார்கள் என்ற அளவில், தமிழ் மொழிக்குப் புதியது என்று சொல்லலாம்.

ஆனல், இன்று கதைகளிலே காணப்படும் "கதைப் பொருள்" சங்க கால இலக்கியங்களிலேயே காணக் கிடக் கின்றன. பழைய இலக்கியங்கள் பலவற்றை இன்று உரை நடையிலே எழுதினல் அவைகள் இன்றையச் சிறுகதை களாகவும் புதினங்களாகவும் விளங்கும். எனவே, தமிழில் உரை நடை ஒரு வளராத துறையாக இருந்ததாலேயே

சிறுகதையும் ஒரு வளராத துறையாக இருந்துவிட்டது. எல்லா மொழிகளிலுமே அச்சுப் பொறிகளின் தோற்றத்திற்குப் பின்னர்தான் உரை நடையும் வளர்ந்தது. தமிழர்களும் அச்சுக்கலையைச் சங்க காலத்திலேயே அறிந்திருப்பார்களேயானல் சிறுகதையும் வளர்ந்திருக்கும். இந்த அளவில் தமிழ் மொழிக்குச் சிறுகதைப் புதியதன்று என்றும் கூறலாம்.

இனிச் சிறுகதை வளர்ந்த முறையைப் பார்ப்போம். சமயத்தைப் பரப்ப இந்நாடு போந்த வீரமா முனிவர் "பரமார்த்த குரு கதை"யை எழுதினர். இன்றைய நோக்கில் அதைப் பேரிலக்கியம் என்று பாராட்ட முடியாதுதான். எனினும், "பரமார்த்த குருகதை" முதல் கதை என்பதாலும், நகைச் சுவை நிரம்பி இருப்பதாலும், விரும்பிப் படிக்கின்ற நிலையில் உள்ளோம்.

"பரமார்த்த குருகதை" வெளிவந்ததற்குப் பின்னர், தமிழில் உரை நடை வளரத் தொடங்கியது. தமிழர்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். "பஞ்சதந்திரக்கதை"களும் "விக்கிரமாதித்தன் கதை"களும் தமிழில் எழுதப் பட்டன. இவ்வாறு உரைநடை சற்று விரைவாக வளரத் தொடங்கியது.

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வ.வெ.சு. ஐயரின் கையில்தான் சிறுகதை இன்றிருக்கும் உருவத்தை அல்லது அமைப்பைப் பெற்றது என்று சொல்லலாம். பெரும்பாலும் மேலை நாட்டு இலக்கியங்களைப் பின்பற்றிச் சிறுகதைகளைத் தமிழில் எழுதினர். புகழ்பெற்ற வெளி நாட்டுக் கதைகளையும் தமிழில் கொணர்ந்தார். "மங்கையர்க் கரசியின் காதல்" என்ற நூலில் இடம் பெறுகின்ற எல்லாக் கதைகளுமே காதலையும் சோகத்தையும் வடித்தெடுத்தவைகள்தாம்.[1] "கவிதை உள்ளம் படைத்த வ.வெ.சு. ஐயர் வீரத்துக்கும் காதலுக்கும் முக்கிய இடம் அளித்து எழுதியதில் வியப்பில்லை" என்று க. நா. சுப்பிரமணியம் கூறுகின்றார்.

அடுத்து, அன்னை நாட்டின் விடுதலைக்கு ஆற்றிய பணிகளுக்குச் சற்றும் குறையாமல் தமிழ் மொழிக்கும் தொண்டு செய்த பாரதியாரே குறிப்பிடத் தகுந்தவராவார். வ.வெ.சு. ஐயரின் கதைகளிலே காணப்படுகின்ற உருவம் பாரதியின் கதைகளில் இல்லாவிட்டாலும், பாரதியின் தெளிவான நடையும் இனிமையான மொழியும் சிறுகதையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின என்பதில் ஐயமில்லை. "நவதந்திரக் கதைகள்" என்ற தலைப்பில் அடங்கி இருக்கும் பாரதியின் கதைகள் பல, அளவில் மிகச் சிறியனவாக இருந்த

1. படித்திருக்கிறீர்களா? பக்கம் 50.

போதிலும், அதில் காணப்படும் நகைச்சுவை உரை நடைக்கு வலிமை தந்தது என்றுதான் சொல்ல வேண்டும். பாரதியார் சற்று ஆர்வம் காட்டியிருப்பாரே யானால், அவர் எழுதிய கதைகள் பெரும் புகழ் பெற்றிருக்கும். வ.வெ.சு. ஐயரும் பாரதியும் வளர்த்த சிறுகதை "[1] மணிக்கொடி" எழுத்தாளர்கள் கையிலேதான் முழுமை பெற்றது. அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் புதுமைப்பித்தனுவார்.

புதுமைப்பித்தன், தன்பெயருக்குப் பொருத்தமாகப் புதுமையை மட்டுமல்ல புரட்சியையும் உண்டாக்கியவர் அவரது கதைகளை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. "விமர்சகர்களுக்கு ஒரு வார்த்தை! வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும் அவை உங்கள் அளவு கோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நான் பொறுப்பாளி அல்ல" என்று புதுமைப் பித்தனே தன் முன்னுரையில் எச்சரிக்கின்றார். [2] புதுமைப் பித்தனின் கதைகளைப் படிக்கின்றவன் பெரும்பாலும் "விறு விறுப்"பையும் உணர்ச்சியையும் பெற்ற போதிலும், சிற்சில சமயங்களில் சிந்தனையின் முடிவில் சோர்வையும் பெறுகின்றான். ஆயினும் புதுமைப்பித்தன் கொடுத்த "சாட்டை" யடிகள் தான் சிறுகதைகளை நிமர்ந்து நிற்கச் செய்தன இலக்கிய உலகிலே!

புதுமைப் பித்தனின் நடை சில இடங்களில் தெளிவாக இல்லாவிட்டாலும், திருநெல்வேலித் தமிழைக் கவிதையாகப் பொழிந்திருக்கின்றார்.

அடுத்து, குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர் கு. ப. ராஜ கோபாலன் ஆவார். இன்றைக்குச் சிறுகதை எழுதுகின்ற எழுத்தாளர்கள் பலர் இவரைப் பின்பற்றுகின்றவர்கள் தான். கு.ப. ராவின் கதைகளெல்லாம் அறிவுரை வழங்கும் ஆழ்ந்த கருத்துக்கள் உடையன அல்ல. மனித உணர்ச்சிகளுக்கு அவர் கதைவடிவம் தந்திருக்கின்றார். "[3] ஒரு ஏக்கமும் இலட்சியமும் கலந்து குழைந்த ஒரு தனித்துவம் கு. ப. ரா. வினுடையது. அதை ஆங்கிலத்தில் **Romantic Agony** என்று சொல்வார்கள்." சாதாரணக் குடும்ப வாழ்க்கையை ஒட்டி கு.ப, ராஜகோபாலனின் கதைகளில் பெரும் இலட்சியங்கள் எதுவும் இல்லை.

ஆழமும் அமைதியும் நிறைந்திருக்கக் கதைகளை எழுதியவர் மௌனியாவார். "[4] உலகச் சிறுகதை இலக்கியத்

---

1. மணிக்கொடி என்பது அப்போது புகழ்பெற்று விளங்கிய ஓர் ஏடாகும்.
2. காஞ்சனை
3. "விமரிசனக்கலை" பக்கம் 113.114. க. நா. சுப்பிரமணியம்
4. "இலக்கிய விமர்சனம்." ரகுநாதன்.

திற்குத் தமிழகமும் தனது சிறந்த பங்கைச் செலுத்த வேண்டுமென்ருல், புதுமைப்பித்தனின் சாப விமோசனமும்'' ''மௌனியின்'' எங்கிருந்தோ வந்தான் ''என்ற இரண்டு கதைகளே போதும்''.

அடுத்து, உளநூலைப் பின்னனியாகக் கொண்டு லா. சா, ராமாமிருதமும், சில அழுத்தமான நோக்கங்களைக் கொண்டு கு. அழகிரி சாமியும் கதை எழுதினர். துன்பியல் கதைகளையே மிகுதியாக எழுதிய லா. ச. ராவின் கதைகளில் ஒருவகை ''ஏக்கம்'' ஊடுருவிச் செல்கின்றது. புதுமைப் பித்தன் கதைகள் சிலவற்றையும் எளிதில் புரிந்து கொள்ள இயலாது.

இருபதாம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் பல்வேறு உருவங்களையும் தன்னகத்தே கொண்டு சிறுகதை வளரத் தொடங்கியது. அரசியல் விழிப்புணர்வையும், சமுதாயப் பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு, பலர் கதைகளை எழுதினர். ஆயினும் தங்கள் கருத்துக்களுக்குக் கதை வடிவம் தருவதிலே அவர்கள் வெற்றி பெறவில்லை. அந்தப் பிரச்சினைகள் உச்சக் கட்டத்தில் இருந்த நாட்களில் அதுபோன்ற கதைகள் மதிப்பைப் பெற்றிருந்தன என்ருலும், நாளடவில் மறக்கப்பட்டு விட்டன. இலக்கியம் என்ற நிலைக்கும் அந்தக் கதைகள் உயரவில்லை, சிலர் நல்ல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டாலும் வெறுக்கத் தக்க ''ஆபாசத்தை''ப் புகுத்தி இலக்கியத்தின் பெருமை யைக் குறைக்கவும் முயன்ருர்கள்.

இங்நிலையில், பொதுவுடைமைத் தத்துவங்களைப் (ஓரளவு) பின்பற்றி விந்தன் பாராட்டக்கூடிய அளவில் எழுதினர். [1] ''போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பார்க்கும் ரசாயனங்களை, சமுதாயத்தின் புற்றுநோய்களுக்கு ''மின்சாரக் சிகிச்சை'' அளிக்கும் புத்தம் புது முறைகளை, குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்திலே ஒழுங்கோ ஓர் மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டி எழுப்பும் உணர்ச்சிமிக்க உயிரோவியங்களை, அந்த மனிதாபிமானத் துக்கு விரோதமாயிருந்த—இருந்து வருகின்ற மனித மிருகங்கள்மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட முயலும் கதைகளை......எழுத வேண்டும்; இதுவே என் எண்ணம் ''என்று விந்தன் தன் முன்னுரையில் கூறுகின்ருர். அதில் அவர் வெற்றியும் பெற்றிருக்கின்ருர் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் டாக்டர் மு. வ. வும் '' [2] விந்தன் படைக்கும் பாத்திரங்கள் பெரும்

1. ''விந்தன் கதைகள்''
2. ''ஒரே உரிமை''

பாலும் அப்பாவிகளே. ஆனால் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங்களாக மாறுகின்றன"—என்று கூறியுள்ளார்.

அப்பாவிகளைப் படைத்த விந்தன், அவர்களின் பொருளற்ற அறியாமையைக் கண்டு வெறுப்பும் அடைகிறார். அதற்குச் சான்றாகத் "தலையெழுத்து" என்ற கதையைச் சொல்லலாம். என்றாலும் விந்தனும் கதையை உருவாக்குவதில் அதிகம் ஆர்வம் காட்ட வில்லை என்றே சொல்ல வேண்டும்.

பின்னர், சிறுகதையின் வளர்ச்சி மேன் மேலும் பெருகத் தொடங்கியது. காதலைக் கதைப் பொருளாகக்கொண்டு பலர் எழுதத்தொடங்கினர். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் அகிலன் ஆவார். அவர் எழுதியஎழுத்துக்களைப் படிக்கின்றவன் "ஒரு நல்ல எழுத்தாளர் வீணாகிவிட்டார்" என்றுதான் கருதுவான். நகைச்சுவைக் கதைகளைச் சிதம்பரசுப்பிரமணியனும் எழுதினார். இவர்கள்பெற்ற வெற்றியைக்கூட அகிலன் பெறவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிடத்தான் வேண்டும்.

இன்றைய சிறுகதை இலக்கியம் (புதினங்களும்) டாக்டர். மு. வ. விற்குக் கடமைப்பட்டுள்ளது. சிறுகதைகளில் செம்மையான் நடையை நுழைத்தவர் அவர். கதையாசிரியர்கள் பலர் தமிழைப் பிழையாக எழுதியதால், "புதினங்களையும் சிறுகதைகளையும் இலக்கியம் அன்று" என்று தமிழ்ப்புலவர்கள் புறக்கணித்தனர். இந்த நிலைமாறி, புதினங்களும் சிறுகதைகளும் நல்ல இலக்கியம்தான் என்ற நிலைவளர மு. வ. வின் கதைகள் உதவின. புலவர்கள் மத்தியிலும் சிறுகதைக்கு மதிப்பு ஏற்பட்டது.

மு. வ.வின் கதைகளில் அமைதியையும், ஆழமான தத்துவங்களையும், செம்மையானநடையையும்தமிழையும் காணலாம். மு. வ. வின்கதைகளில் மனிதமிருகங்கள் மீது விந்தன் கக்குகின்ற வெறுப்பையோ, புதுமைப்பித்தன் தருகின்றச் சாட்டை அடியையோ காணமுடியாது. கு. ப. ராஜகோபாலனைப்போல் உள்ள உணர்வுகளுக்குச் சிறுகதை வடிவமே அவர் தந்துள்ளார். ஆனால் கு. ப. ரா. காதலைத்தான் தன்கதைப் பொருளாக் கொண்டார். ஆனால் மு.வ. தன் கதைகளில் தான் கண்ட உலகையே எடுத்துரைத்தார். அவைகளுள் பல அவரது சொந்த அனுபவங்களாக இருக்கக் கூடும்.

இதுவரை, வீரமாமுனிவர்முதல் வரதராசனார்வரை எவ்வாறு சிறுகதை வளர்ந்தது என்பதையும், அதன் வளர்ச்சிக்குத் துணையாக நின்றவர்கள்யார் யார் என்பதையும் அறிந்தோம். நமதுநாடு விடுதலை பெற்றதற்குப் பின்னர் சிறுகதைகளைத்தாங்கிய வண்ணம் வெளிவரும் ஏடுகள் பெருகியுள்ளன;

“ஆன் உருபு”

மோ. இசரயேல்,

தமிழ் ஆய்வுத் துறை சென்னைப் பல்கலைக் கழகம்.

“மூன்றாகுவதே, ஒடுவெனப்பெயரிய” (சொல். 73) என்று குறிப்பிட்டு மூன்றாம் வேற்றுமை உருபு “ஒடு” எனத் தெளிவு படுத்தியுள்ளார் ஆசிரியர் தொல்காப்பியனார். “ஆன்” மூன்றாம் வேற்றுமை உறுபு என்று அவர் எந்த இடத்திலும் கூறிற்றிலர். ஆனால் தொல்காப்பிய வேற்றுமை மயங்கியலில் உள்ள, பின்வரும் நூற்பாக்கள் ‘ஆன்’ உருபை அவர் ஒப்புக் கொண்டுள்ளார் என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலமே தொகவரு காலை (சொல். 97)

குஐ ஆன்என வரூஉ மிறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே (சொல். 108)

உரையாசிரியர்கள் அனைவரும் ‘ஆன்’ மூன்றாம் வேற்றுமை உருபு என்று கூறியதோடு அமையாது அதனை விளக்கும் பல எடுத்துக்காட்டுகளும் தந்துள்ளனர். வேற்றுமை மயக்கம் கூறுங்கால் தொல்காப்பியனார் வேற்றுமை எண் முறைப் படியே அவை மயங்கும் முறையைக் கூறிச் சொல்கின்றார். அம்முறை வைப்பை ஆயின், ‘ஆன்’ மூன்றாம் வேற்றுமை உருபு என்பது தெளிவுறும்.

எழுத்தாளர்களும் பெருகியுள்ளனர். எழுத்தார்வத்தைத் தூண்ட ஏடுகள் பல பரிசுகளும் வழங்குகின்றன.

ஆயினும், கதைகளின் எண்ணிக்கைப் பெருகியுள்ள அளவுக்கு எழுத்தின் தரம் உயரவில்லை என்றுதான் வேதனையோடு உரைக்க வேண்டியுள்ளது. “குடும்பக்கதைகள்” என்ற பெயரில் உயிர்த்துடிப்பில்லா, ஆழ்ந்த எழுச்சியில்லாவள மற்றக் கதைகளே வளர்ந்துள்ளன. ஜெயகாந்தன் போன்ற ஓரிரு எழுத்தாளர்களே அந்தச்சுழலில் சிக்காது நல்ல கதைகளை உருவாக்கிவருகின்றனர்.

தமிழ்ச்சிறுகதைச் செழிக்கவேண்டுமாயின் இலட்சிய எழுத்தாளர்கள் உருவாகவேண்டும். எழுதுகின்ற ஒவ்வொரு எழுத்தாளனும்தான் படைக்கவிருப்பது “இலக்கியம்” என்று எண்ணவேண்டும். அவர்கள் அவ்வாறு எண்ணித்தோல்வியுற்றாலும். சிறுகதைக்கு நாமும் தொண்டுசெய்துள்ளோம் என்று எண்ணி மகிழலாம்.

சிறுகதை வளர்க! வாழ்க!

தொல்காப்பினுர் மூன்றும் வேற்றுமை உருபு வழங்கும் சிறப்புப் பொருட்களை விளக்கும் நூற்பாவின்கண் 'இன்ஞனேது" (சொல் 74) என்னும் சொற்றொடர் ஒன்றை அமைத்து உள்ளார். அதனைத் தெய்வச்சிலையார் "இன்+ஆன்+எது" எனப் பிரித்து மூன்று உருபுகளாகக் கொண்டு "புகையுண்மையின், புகையுண்மையான், புகையுண்மை யேதுவாக" என எடுத்துக் காட்டுகளும் தந்துள்ளனர்.

ஆசிரியர் தொல்காப்பியனுரே 'ஆன்' உருபைச் சொல்லிய முறையான் சொல்லவும் படுமே (பொருள்.5) என்னும் அடியில் எடுத்தாண்டுள்ளனர். மூன்றும் வேற்றுமையின் கீழ் உரையாசிரியர் கொடுத்துள்ள 'மண்ணிஞன் இயன்ற குடம்', 'அறிவான் அமைந்த சான்ரோர்' 'வாணிகத்தான் ஆயினுன்' என்னும் சான்றுகளும் 'ஆன்' மூன்றும் வேற்றுமை உருபு என்பதைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

தொல்காப்பியனர் மூன்றும் வேற்றுமைக்கு வினைமுதல், கருவி என இரண்டே பொருட்கள் கூறி உள்ளார். நச்சினர்க்கினியர் அவற்றிற்கேற்ப எடுத்துக்காட்டுகளைப் பாகு படுத்தித் தெளிவுபடுத்தி உள்ளார். உடனிகழ்ச்சிப் பொருளுக்குத் தொல்காப்பியனர் சிறப்புக் கொடுத்திலர் நச்சினர்க்கினியர் அதனை வினைமுதலில் அடக்கிக் காட்டுகிருர். ஆசிரியர் தொல்காப்பியனர் கருத்துப்படி இன்று வழங்கும் மூன்றும் வேற்றுமையின் எல்லாப் பொருட்களிலும் 'ஒடு' என்னும் உருபை ஒப்ப 'ஆன்' வழங்கியது என்பது தெளிவு. எனவே பி. சுப்பிரமணிய சாஸ்திரியார் 'ஆன்' தொல் காப்பியர் காலத்தில் 'ஒடு' வின் மாற்றுருபேயாம் எனக் கூறி உள்ளனர்.

இவ்வுண்மையினை உரையாசிரியர்களும் "தூங்குகையானேங்கு நடைய," 'உறழ் மணியான் உயிர் மருப்பின' (புறம் 22.1) என்னும் எடுத்துக் காட்டுகளில் 'ஆன்' உடனிகழ்ச்சிப் பொருளில் வழங்கிற்று எனக் கூறித் தெளி படுத்தி உள்ளார்கள். எனினும் தொல்காப்பியர் நூற்பாக் களைக் கூர்ந்து நோக்கின், 'ஆன்' அவர்காலத்திலேயே வினை முதல் கருவி ஆகிய பொருட்களில் பெரும்பாலும் வழங்கிற்று என்பதும் உடனிகழ்ச்சிப் பொருளில் அருகியே ஆட்சி பெற்றிருந்தது என்பதும் தெளிவுறும் தொல்காப்பியனர் இவ்வுண்மையைத் தெளிவு படுத்தாமையின் உரையாசிரியர் களும் பகுத்துக் கூறிற்றிலர். சில எடுத்துக் காட்டுகள் தவிர எஞ்சிவை. 'ஆன்' வினைமுதல், கருவி ஆகிய பொருட் களில் வழங்கிற்று என்பதைத் தெளிவு படுத்துகின்றன. அவைகளைத் கீழே தருதும். [சொல். 74]

(1) அதனின் இயறல் = ஒன்று ஒன்றன் பண்ணப்படுதல் எ-டு. மண்ணனியன்ற குடம்

(2) அதற்றகு கிளவி = ஒன்றனொன் ஒன்று தருதல்
எ-டு. அறிவான் அமைந்த சான்றோர்

(3) அதன் வினைப்படுதல்
எ-டு. சாத்தனான் முடியும் இக்கருமம்

(4) அதனி னாதல் = ஒன்றனான் ஒன்று ஆதல்
எ-டு. வாணிகத்தான் ஆயினான்.

(5) அதனிற் கோடல் = ஒன்றனான் ஒன்றைக் கோடல்
எ-டு. காணத்தாற் கொண்ட அரிசி

இவ் வெடுத்துக்காட்டுகளில் 'ஆன்' உருபே வினைமுதல் கருவி ஆகிய பொருட்களில் வழங்கியிருத்தலும் பின்வரும் எடுத்துக் காட்டுகளில் உடனிகழ்ச்சிப் பொருளில் 'ஓடு' உருபே வழங்கப் பெற்றிருத்தலும் தெளிவு.

(6) அதனொடு மயங்கல் = ஒன்றனொடு ஒன்று மயங்கல்
எ-டு. எண்ணொடு விராய அரிசி

(7) அதனொடு இயைந்த ஒரு வினைக்கிளவி = ஒன்றனொடு ஒன்று இயைந்த வேறு வினை ஆகல்
எ-டு. ஆசிரியனொடு வந்த மாணாக்கன்

(8) அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்பு உரை = ஒன்றனொடு ஒன்று இயைந்த ஒப்பு அல்லாத உரை
எ-டு. மலையொடு பொருத மால் யானை.

தொல்காப்பியனார் மூன்றும் வேற்றுமைக்கு அளித்துள்ள சிறப்பும் பொருட்களிலே உரையாசிரியர்களின் எடுத்துக் காட்டுகள் இரண்டு பிரிவை உண்டாக்கி வளர்த்து விட்டன என அறிகிறோம்.

நன்னூலார் மூன்றும் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என நான்கு உருபுகளைக் கொண்டனர் [நன். 297] தொல் காப்பிய உரையில் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் ஆல் உருபைச் சேர்ந்துள்ளனர். நன்னூல் உரையாசிரியர்கள் ஆல், ஆன் இரண்டும் வினைமுதல், கருவி ஆகிய பொருட்களி லும், ஒடு, ஓடு உடனிகழ்ச்சிப் பொருளிலும் பெரும்பாலும் வழங்கும் என வரையறுத்துக் கூறி உள்ளனர்.

நச்சினார்க் கினியர் 'ஆன்' 'ஆலா'ய்த்திரிந்தது என்பர். 'ஆல்' ஆனின் திரிபு என்பதை இலக்கண அறிஞர் எவரும் ஒப்புக்கொள்வர். 'ஆல்' உருபு முதன்முதல் கலித்தொகை என்னும் நூலில் காணக்கிடக்கின்றது. இவ்வுருபு பிறழ்பிரிப் பினால் (Metanalysis) தோன்றி இருத்தல் கூடும் என்பதை டாக்டர் மு. வரதராசனார் (மொழி இயற் கட்டுரைகள் பக். 203—206) விளக்கி உள்ளார்

அறிவானேர்ந்தான் > அறிவான் + நேர்ந்தான்
> அறிவால் + நேர்ந்தான்

சங்க காலத்தில் பெரு வழக்குப் பெற்றிருந்த 'ஆன்' உருபு இன்று 'ஆல்' ஆக உருமாற்றம் அடைந்து விட்டது. வினை முதல், கருவி, உடனிகழ்கவு ஆகிய மூன்று பொருட்களிலும் வழங்கி வந்த 'ஆன்' இன்று வினைமுதல், கருவி ஆகிய பொருட்களில் தன்னை வரையறுத்து நிறுத்திக் கொண்டது. தொல்காப்பியனார் காலத்தில் மூன்றும் வேற்றுமையின் மாற்றுருபாகக் கருதப்பட்ட 'ஆன்' உருபு உருமாற்றத்தையும் (ஆன் > ஆல்) பொருள் மாற்றத்தையும் அடைந்த போதிலும் வினைமுதல், கருவி ஆகிய பொருட்களில் தனி உரிமை பெற்று வழங்குவது, தனயன் தந்தையின் சொத்தைப் பிரிவினை செய்து, தன் நிலைமையில் மாற்றம் அடைந்து, தன் எல்லையையும் வரையறுத்துக்கொண்டு, தனி உரிமை பெற்று வாழ்வதனை ஒக்கும்.

இன்று மொழியியல் அறிஞர் மூன்றும் வேற்றுமை உருபுகளான ஆன் > ஆல் ; ஒடு > ஓடு முரண்பட்டவை ; மாற்றுருபுகளல்ல; தனி உருபுகளே என்று கருதுகின்றனர். எனவே கருவி (Instrumental) உடனிகழ்ச்சி (Sociative) ஆகிய இரண்டு வேற்றுமையின் உருபுகளாக அமைய வேண்டும் என்றும் தெளிவு படுத்தி வருகின்றனர். இவ்வுண்மையை உணர்ந்த கால்டுவெல் ஐயர் அவர்களும் தமிழ் இலக்கண ஆசிரியர்களை வட மொழி இலக்கணத்தையொட்டி இலக்கணம் அமைத்துத் தவறு செய்ததாகக் குறை கூறி உள்ளார். [திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். பக். 277].

மூன்றும் வேற்றுமை இரண்டு வேற்றுமையாம் தகுதி வாய்ந்தது. அதன் அடிப்படைக் கரு தொல்காப்பியனார் காலத்திலே அமைந்து கிடந்து இன்று தெள்ளத் தெளிவாய்க் காட்சி அளிக்கின்றது. அவர் காலத்தில் "ஒடு, ஆன்" உருபுகள் ஓரளவு மாற்றுருபுகளாக வழங்கினும் இன்று அவற்றின் திரிபுகளான "ஒடு, ஆல்" உருபுகள் முற்றிலும் வேறுபட்ட பொருளுடையவைகளாய்ப் பிரிந்து வளர்ந்து விட்டன என்பதை யாரும் மறுத்தல் இயலாது.

ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

ஆட்டனத்தி :— [மயக்கந்தெளிந்து முனவுகிருன்]
ஊ ஊ ஆ! அப்பா ஆ! ... ...

இரும்பிடர்த்தலையார் :—
... ... ஒன்றுமில்லை அஞ்சாதே
உள்ளமிலாக் கோழைஅவன் ஓடி விட்டான் (174)
வலியிருக்கும் மெல்லஎழுந் தென்னுடன் வா

ஆட்டனத்தி :—
மனவலிதான் மிக்குளது—மடையன் இங்குத்
தலைசிறந்த தமிழ்மொழியை இகழ்ந்தான் ......

இரும்பிடர்த்தலையார் :—
... ... தம்பி
தளராதே தறிதலைகள் ஒன்று கூடி
மலையாகி எதிர்த்தாலும் ; மாசு கூறி
மடனுள்ள மக்கள்தமை மயக்கி ஞலும்
நிலைகுலையாள், நெறிதவருள் நெடுந்த மிழ்த்தாய்!

ஆட்டனத்தி :—
நீங்கள் ... ஆ! கவியரசர்! வணக்கம் ஐயா (175)

மருதி :— [வந்து கொண்டே]
கவியரசே! வணக்கம் ... ஆ! ஆட்டனத்தி
கண்ணிலென்ன? ... ...
[வருந்துகிருள்]

ஆட்டனத்தி :—
... ... ஒன்றுமில்லை ... மருதி—அம்மா !

இரும்பிடர்த்தலையார் :— [மருதியைப் பார்த்து]
அவரைமிக விழிப்பாக அழைத்துச் செல்க!

மருதி :—
அவ்வாறே செய்வேன் ... ...

இருவரும் :—
... ... எம் வணக்கம்

இரும்பிடர்த்தலையார் :—
... ... வாழ்க !

[இருவரும் போகிறார்கள் ஆட்டனத்தியைப்பற்றி மேலும் எண்ணுகிறார் புலவர்]

புவியரசர் இலக்கணமெல் லாமி வன்பால்
பொருந்தியுள... தோளிடத்தே பொறியும் உண்டு
தவிரவும்அச் சேரன்மகன் மறைந்த ஆண்டும்
தங்கியிவன் பால்மிளிரும் ...ஐய மில்லை (176)

ஆட்டனத்தி சேரர்குலத் துதித்த வன்தான்
அன்றேல்இவ் வாண்மையறி வடக்கந் தூய்மை
ஈட்டெழில்அன் பிவனிடத்தில் இருத்தற் கில்லை
என்னேஅவ் வூழ்வலியின் பெருமை--பார்ப்போம்.

[இரும்பிடர்த்தலையார் போகிறார் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சரத்குமாரன் வெளியே வந்து]

சரத்குமாரன் :—

ஆட்டனத்தி சேரமன்னன் மகனா? விந்தை !
அனாதை எனக் கருதினெனே... இருந்தாலும் நான்
போட்டபுள்ளி தவறவிடேன்... சேர நாடு
போய்த்தெரிந்து மற்றவற்றைப் பிறகு செய்வேன். (177)

பதினைந்தாங் காட்சி முடிவு

காட்சி 16.

நடிகர் : செவிலி முல்லையம்மை, பாணன், கூத்தன்
இடம் : பாணன் வீடு
காலம் : முன்னிரவு

[பாணன் தனியே பாடிக்கொண்டிருக்கிறான்]

பாடல்

பண் : பந்துவராளி சீர் : ஆதி

முதனிலை

இசை உருவானது செந்தமிழே—முதல்
ஏழிசை கண்டதும் எந்தமிழே (இசை)

இடைநிலை

அசையும் பொருள்கள் முதல் ஆயப் பொருளனைத்தும்
ஆழ்த்தின்ப வெள்ளத்தில் சூழ்ந்துதமை மறக்க (இசை)

இறுதிநிலை

மிசையும் உணவும் பொருள் நசையும் மறந்துகளி
மேவி அருளமிழ்த வாவிபடிந் துவக்கத்
திசையும் கடலும்மழை பொசியும் முகிலும் கிளர்
தென்றல் வளியும் சற்று நின்று சுவைக்கவளர் (இசை

நெஞ்சங்கனிந்து பெயல் மஞ்சும் மறந்திருக்க
நீரும்அலை நிலைக்கப் பாரும் சுழல் மறக்கச்
செஞ்சொல் அமுதமழை கொஞ்சும் அகச்செவியில்
தேக்கி உளத்தினிமை காக்கவரும் புவியில் (இசை)

[அப்பொழுது செவிலி முல்லையம்மை வருகிருள்]

முல்லையா? வா!வா!நானும் உனைத்தான் தேடி
முன்பேயே வர நினைத்தேன் ....

முல்லை :—

.... முகிலோன் வீட்டில்?

கூத்தன் :—

இல்லையேநான் தனியாள்இவ் வீட்டைக் காக்க
எவள்வரப் போகின்ருளோ? இனிமேல் உன்வாய்ச்
சொல்லையேதான் நம்பியுள்ளேன் ....

முல்லை :— [சோர்வோடு]

.... என்னண்ணு உன்
துன்பமறியா தவளா என்ன செய்வேன்?
தொல்லையே என் உடன்பிறந்து விட்டது

கூத்தன் :—

.... ஆமாம்
சொல்லுசொல்லு ....

முல்லை :—

...... ஆட்டனத்தி எங்கே சென்ருன்? (178)

கூத்தன் :—

எனக்கொன்றும் தெரிவதில்லை... அவனும் இப்போ
தெப்படியோ இருக்கின்ருன்... எழுச்சி யில்லை
மனத்தைவிட்டுப் பேசுவதே குறைவு ......

முல்லை :—

.... ஆமாம்
வயதுவந்த பிள்ளைகளாய்ப் போய்விட் டார்கள்

கூத்தன் :—

நினைத்தபடி திரிகின்ருன் முகிலோன்—கேட்டால்
நெருப்பாகச் சீறுகிருன்; ஆட்ட னத்தி
தனைப்பொதுவாய் வெறுக்கின்ருன் அவனை இங்கே
தங்கவிடக் கூடாதாம் என்ன செய்வேன்? (179)

முல்லை :—

ஆட்டனத்தி இருப்பதிலே அவனுக் கென்ன?
அப்படியா சொல்லுறாகின்?... அவனைப் பற்றிக்
கேட்டவெல்லாம் மெய்தானே? ... ...

கூத்தன் :— [துணுக்குற்று]

... ... என்ன முல்லை
கேட்டாய்நீ? எதைப்பற்றி... ஏன்நீ பேச
மாட்டாமல் நிற்கின்றாய்? மகனைப் பற்றி
வம்பெதுவும்? ... ...

முல்லை :—

... ... ஒன்றுமில்லை எனக்கும் இங்கே
ஆட்டனத்தி இருப்பத்திலே விருப்பமில்லை
ஆனாலும் ... ...

கூத்தன் :—

... ... ஆனாலும் என்ன? சொல்லு! (180)

முல்லை :—

நாமென்ன செய்வது எல்லாம் விதியின்போக்கில்
நடக்கட்டும் ... ...

கூத்தன் :—

... ... நடந்ததென்ன தெளிவாகச் சொல்!

முல்லை :—

தீமுன்னர் ஆட்டனத்தி நெருங்கு கின்றான்
தென்றலெனக் கருதுகிறாள் அவளும்—ஆனால்
கோமன்னர் குலக்கொழுந்தை ஆடுங் கூத்தன்
கொள்ளமனம் வருமா சொல்? ... ...

கூத்தன் :— [தன்னை நினைந்து]

... ... ஏன்வராது?
நீமுன்னர்ச் சொன்னபடி முகிலோனுக்கு
நியமித்த பெண்ணலவோ ஆதி மந்தி? (181)

யாவளெனத் தெரியாமல் அவளைப் பெற்றார்
யார்என்றும் கேளாமல் உன்னை நம்பி
நீவளர்த்த காரணத்தால் அனாதை என்றும்
நினைக்காமல் பெண்கேட்டேன்—ஆனாலும்நீ
தீவளர்த்துக் கொடுத்துவிட வில்லை—உன்றன்
சிறந்தமகள் உன்வீட்டில் இருக்கின்றாள்—ஓர்
காவலனைப் பார்த்துச் செய் என்குலத்தைக்
கண்டபடி குறைவாகப் பேச வேண்டாம் (182)

ஆடித்தான் பிழைக்கின்றோம் உங்களைப் போல்
அரசபரம் பரையினிலா பிறந்தோம் ......

முல்லை :— [மனம் வருந்தி]
.... அண்ணா
வேடிக்கை என நினைத்தேன் உண்மை யாக
வெகுளிகொண்டாய் ...என்கருத்து விளங்கா மற்றான்
பாடிக்கொண் டிருக்கின்றாய் நானும் உங்கள்
பழங்குடியில் பிறந்ததனை மறக்க வில்லை
வாடிப்போய் இருக்குமெனை நீயும் வைதால்...

கூத்தன் :—
வசைமுதலிற் றொடங்கியதுன் வாய்தான் மேலே? (183)

முல்லை :—
ஆதிமந்தி பாலிந்த ஆட்டனத்தி
ஆசைகொண்டு சுற்றுவதாக் கேள்விப் பட்டேன்
சேதிதெரிந் திங்குவந்தால்—முகிலோன் உன்பால்
செப்பியதைச் சொன்னாய்—முன் கேட்டவெல்லாம்
பேதமில்லை என்றுள்ளம் ....

கூத்தன் :— [இடைமறித்து]
.... கொள் ளாதே நீ
பிழைசெய்யான் ஒருபோதும் அத்தி—செய்தால்
பாதியிலே அதைக்கிள்ள வேண்டும் ......

முல்லை :—
.... பார்ப்போம்

கூத்தன் :—
பார்க்கிறதா? முல்லை! நான் சொல்வதைக் கேள் (184)
உடனே நாம் திருமணத்தை முடித்தல் வேண்டும்
உன்கருத்து

முல்லை :—
.... யாருக்கு ?

கூத்தன் :—
.... முகிலோ னுக்கே

முல்லை :—
அடஇறைவா! அதைமுடிக்க இயலாமல் தான்
அலமறுகின் றேன் நானும் ....

கூத்தன் :—
.... இடையூ றென்ன ?

முல்லை :—

நடமாடும் உன்வளர்ப்பு மகனை யன்றி
நான்மணக்க மாட்டேனென் ருதி மந்தி
திடமாக ஆணையிட்டுக் கூறி விட்டாள்
செய்வதென்ன ? ....

கூத்தன் :— [வியந்து]

...... தெய்வத்தின் திருவு ளந்தான் (185)
போகட்டும் அவனும்என் மகன்தான்—வேறு
புதுப்பெண்ணைப் பார்த்துமுகி லோனுக்குப் பின்(பு)
ஆகட்டும் அத்திக்கே முதலிற் செய்வோம்...

முல்லை :—

அதையும்என் மனம்ஒப்ப வில்லை ......

கூத்தன் :— [வெகுளியும் வெறுப்பும் சேர]

.... பின்னே
சாகட்டும் ....

முல்லை :— [சீற்றத்துடன்]

.... என்ன சொன்னுய் ?

கூத்தன் :—

.... ஆமாம் நீதான்
தடுமாறித் தடுமாறிப் பேசுகின்ருய்
வேகட்டும் காதலர்கள் உள்ளம் என்ற
விருப்பமுனக் கிருக்கிறது ....

முல்லை : [தழுதழுத்த குரலோடு]

.... விளையாட்டில்லை (186)
அண்ணு நான் சொல்வதைக் கேள்! ஆதிமந்தி
அரசகுலக் கொடியே தான்

கூத்தன் :— [வியப்புடன்]

.... என்ன ?

[அப்பொழுது அங்கு வந்த ஆட்டனத்தி முல்லையம்மை பேசுவதைச் செவிமடுக்கிருன் ஆதிமந்தியைப் பற்றிய பேச்சாக லின் வியக்கிருன்]

முல்லை :— [பதற்றத்துடன்]

.... இந்த
மண்ணுளும் கரிகாலன் மகள்அண்ணு இம்
மந்தணத்தை யாரிடமும் சொல்லாமல் என்
கண்ணுக வளர்த்தமையால் அவளை விட்டுக்
கால்நாழி உயிர்வாழ முடியாமல் என்
பெண்ணுகக் கூறிக்கொண் டென்பக் கத்தே
பேணிவைத்து மூடியிது நாளிருந் தேன் (187)

பெரும்பிழைதான்—என்செய் வேன்பாசத் தாலே
பேதைமையை செய்து விட்டேன் பருவத்தாலே
அரும்புகின்ற காதலுக்கின் றடிமை யானுள்
அரசகுலக் கிழக்குவரக் கூடா தென்றுல்
விரும்புமவள் உளம்வெதும்பிப் போவாள்—யானே
வெந்துமடிந் திடுவேன் நம் மன்னன் பெற்ற
கரும்பை, எனதிருகண்ணைக் கலங்கச் செய்யும்
கயமைஎனக் கொருபோதும் இல்லை யண்ணு (188)

[ஆதிமந்தி கரிகால் வளவன் மகள் என்ற உண்மையை அறிந்த ஆட்டனத்தி மனம் சோர்ந்து கலங்கியவனுய் அவர்கள் அறியாமல் வெளியேறுகிருன்]

கூத்தன் :—

விதிப்படிதான் நடக்கும் அவள் விரும்புகின்ற
வீரனும்ஓர் அரசகுலத் துதித்தி ருப்பான்

முல்லை :—

அதெப்படி நாம் கருதுவது ...—

முல்லை :— [தன் ஐயத்தை வெளியிடாமல்]

... ... ஆட்டனத்தி
அரசகுணம் எல்லாமும் அமையப் பெற்ருன்
மதிப்புடைய மக்கள்மனம் மாறு பட்ட
வழிபோகா, மற்றுமவன் சேர நாட்டுப்
பதிக்கருகில் முன்பெனக்குக் கிடைத்தான் நானே
பாணனைப் போல் இதுவரையும் வளர்த்துவிட்டேன் (189)
பெற்றவரைக் காட்டிலுமிங் கன்பினுலே
பேணிவளர்த் தவர்களுக்கே பிள்ளைப் பாசம்
முற்றவிருக் கும்என்ற மூத்தோரின் சொல்
முழுவுண்மை அத்திக்கிங் கென்னை விட்டால்
சுற்றமில்லை ....

முல்லை :—

...... ஆட்டனத்தி பிறப்பின் உண்மை
துலங்காமல் மணம்பேசத் துணியா துள்ளம்
மற்றபடி தெய்வத்தின் உளம்போல் அண்ணு
வருகின்றேன் ....

கூத்தன் :—

...... ஊழிருந்தால் முடியும் வாம்மா (190)

[முல்லை சோர்வோடு போகிருள் கூத்தன்கண் கலங்கி நிற்கிருன்]

[பதினுருங் காட்சி முடிவு]

காட்சி 17.

நடிகர் : ஆதிமந்தி, மருதி, இரும்பிடர்த்தலையர். இடம் : சோலை
காலம் : பிற்பகல்

ஆதிமந்தி :—

தாயாரைக் காணாத பெண்பிறப்பாய்த்
தரணியிலே ஏன்பிறந்தேன் ? தந்தைபேணுச்
சேயாக வளர்கின்ற சிறுமை என்னைத்
தீயாகிச் சுட்டெறிக்க ஏன்பிறந்தேன் ?
பேயாகப் பிறந்தாலும் பிழைசொல்லார்கள்
பெண்ணென்றால் பிதுக்கி யிதழதுக்குகின்றார்
தேயாத கொடுமைகளைத் தேர்ந்தமைத்தாய்
சிந்தனையைப் பெண்டிருக்கேன் உடனமைத்தாய் (191)

கல்லாகப் பிறக்கவில்லை—காவி னுள்ளே
கமுகாகப் பிறக்கவில்லை—கழனியில் வாழ்
நெல்லாகப் பிறக்கவில்லை—நீலவானில்
நீந்துகின்ற புள்ளினமாய்ப் பிறக்கவில்லை
புல்லாகப் பிறக்கவில்லை—பூந்தடத்தில்
பூவாக—மீனாகப் பிறந்தேனில்லை
எல்லாரும் எள்ளுகின்ற பெண்பிறப்பாய்
ஏன்பிறந்தேன் இறைவா நான் ஏன்பிறந்தேன் (192)

மாதருக்கு மதிவளரும் கல்வி கற்க
வகையில்லை மனங்கவர்ந்த ஒருவன் தன்னைக்
காதலிக்க உரிமையில்லை கருத்துநாடும்
கணவனுடன் வாழ்வதற்கோர் காப்புமில்லை
வேதனைக் கோர் அளவில்லாப் பெண்பிறப்பை
விரும்பினைக் களித்தாயே இறைவா ! ஊரார்
தீதுனுக்கே ஆளாகித் திரித்துப் பேசி
சிறைப்படுத்திக் கொடுமை செய்யப் பிறப்பித்தாய்ஏன் ?
(193)

[அப்பொழுது மருதி பின்புறமாக வந்தவள் ஆதிமந்தியின் புலம்பலைக் கேட்டு வருத்தத்தோடு]

மருதி :—

வருந்தாதே ஆதிமந்தி—வருந்துன்பத்தை
மதியாலே மாற்றுகின்ற கல்வி பெற்றும்
திருந்தாமல் இப்படிநாம் திகைக்கலாமோ ?
செவிலியுளம் தெரியாமல் தேம்பு கின்றாய்
அருந்தாத அமிழ்தைப்போல் வளர்த்த உன்னை
அரசியைப் போல் அமர்த்தவழி தேடுகின்றாள்